# பல்கலைக்கழக நூலகர்கள் யார்?

**மு. நோமன் ரவிக்குமார்**
சிரேஷ்ட உதவி நூலகர் (தரம் 1)
கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை
*ravikumarmn@esn.ac.lk*

“நூலகமே ஓர் பல்கலைக்கழகத்தின் இதயம்” எனக் கருதப்படுவது நாம் யாவரும் அறிந்ததே, எனவே ஒரு நூலககத்தின் செயற்பாடு பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயற்பாடுகளுக்கு மிகவும் அவசியமாக அமைவதுடன் நூலகங்களில் பணி புரியும் நூலகர்களின் கல்விசார் வகிபங்கும் பல்கலைக்கழகத்தின் சீரான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இன்றியமையாததாககிறது. இருப்பினும் பல்கலைக்கழக நூலகர்கள் யார்? பல்கலைக்கழகத்தில் நூலகர்களின் வகிபங்கு என்ன? போன்ற கேள்விகள் இன்றும் எழாமல் இல்லை. எனவே இவ்வினாக்களுக்கு விடை காணுவதுடன் பல்கலைக்கழக நூலகர்கள் தொடர்பாக ஓர் முழுமையான புரிதலை வழங்கும் ஒரு முயற்சியே இக்கட்டுரையாகும்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் காணப்படும் நூலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பிரதானமாக மூன்று பிரிவுகளில் உள்ளடக்கப்படுகின்றனர். முதலாவது பிரிவு கல்விசார் ஊழியர்களாகும். இப்பிரிவினுள் உதவி நூலகர், சிரேஷ்ட உதவி நூலகர் (தரம் II), சிரேஷ்ட உதவி நூலகர் (தரம் I), பிரதி நூலகர் மற்றும் நூலகர் போன்ற பதவி நிலைகள் உள்ளடக்கப்படுகின்றன. இரண்டாவது வகை நூலக நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான நிர்வாக ஊழியர்களை உள்ளடக்குகின்றது. இவ்வகையினுள் உதவிப் பதிவாளர் மற்றும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (நூலக சேவை) போன்ற பதவி நிலைகள் உள்ளடங்குகின்றன. மூன்றாவது பிரிவு கல்விசாரா ஊழியர்களை உள்ளடக்குகின்றது. இதனுள் நூலகத்தில் நடைபெறும் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான நூலகத் தகவல் உதவியாளர்கள், நூல் கட்டுமான பணியாளர்கள் மற்றும் சிற்றூழியர்கள் போன்றவர்கள் உள்ளடக்கப்படுகின்றனர். எனவே பல்கலைக்கழக

நூலகங்களின் கல்விசார் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்கள் முதலாம் வகையினுள் உள்ளடக்கப்படும் பதவி நிலைகளிற்குரிய பல்கலைக்கழக நூலகர்களே.

1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் (பகுதி X), பல்கலைக்கழக நூலகர்கள் அதாவது மேலே முதலாவது வகையினுள் உள்ளடக்கப்பட்ட நூலக பதவி நிலைகுரியவர்கள் பல்கலைக்கழக "ஆசிரியர்கள் (Teachers)" என்னும் வகைக்குள் உள்ளடக்கப்படுவதுடன் நூலகர் பதவி, பல்கலைக்கழகங்களில் காணப்படும் பிரதான பதவி நிலைகளில் ஒன்றாகவும் வரையறை செய்யப்படுகிறது. இதனடிப்படையில் பல்கலைக்கழக நூலகர்களின் ஓய்வூதிய காலம், சம்பளம், கல்விசார் கொடுப்பனவுகள், விடுப்புகள் மற்றும் ஏனைய சலுகைகள் போன்ற அனைத்து விடயங்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு இணையாக காணப்படுவதுடன் பல்கலைக்கழக நூலகர்களின் பதவிநிலை இடமாற்றமற்றதாகிறது (Nontransferable position).

மேலும் பல்கலைக்கழக நூலகர்களின் பதவி நிலைகள் ஒவ்வொன்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் பதவி நிலைகளுக்குச் சமானமாக அமைவது குறிப்பிடதக்கது. அதாவது உதவி நூலகர், சிரேஷ்ட உதவி நூலகர் (தரம் II), சிரேஷ்ட உதவி நூலகர் (தரம் I), பிரதி நூலகர், நூலகர் ஆகிய பதவி நிலைகள் முறையே விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II), சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I), இணைப் பேராசிரியர், பேராசிரியர் போன்ற பதவி நிலைகளுடன் இணையாக்கபடுவதுடன் இப்பதவி நிலைகளுக்கான பதவி உயர்வுக்கு பின்பற்றப்படும் முறைமைகளும் ஒன்றாகவே காணப்படுகின்றன. குறிப்பாக பிரதி நூலகர் மற்றும் நூலகர் பதவிக்காக பின்பற்றப்படும் பதவி உயர்விற்குரிய விதிமுறைகளும் பெற்றுக் கொள்ள வேண்டிய வெட்டுப்புள்ளிகள் அதற்குரிய புள்ளி வழங்கும் திட்டம் (Marking scheme) இணைப் பேராசிரியர், பேராசிரியர் போன்றோருக்கான புள்ளி வழங்கும் திட்டத்தை ஒத்ததாகும்.

அத்துடன் பல்கலைக்கழக நூலகர்களின் பதவி நிலைகளின் ஆரம்ப பதவி நிலையான உதவி நூலகர் பதவிக்கான ஆட்சேர்ப்பிற்குரிய அடிப்படை கல்வித் தகைமையானது விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி நிலைகுரிய ஆட்சேர்ப்பிற்குரிய அடிப்படை கல்வித் தகைமையிற்கு இணையானது. எனவே தகுதிகாண் விரிவுரையாளர் பதவியினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியுடைய ஒரு நபரே உதவி நூலகர் பதவியில் நியமிக்கப்படுகின்றார். அது மட்டுமல்லாமல் தற்போதைய காலகட்டத்தில் பல பல்கலைக்கழக நூலகர்கள் பகுதிநேர விரிவுரையாளராக தகவல் மற்றும் விஞ்ஞான

துறையில் தமது கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பல்கலைக்கழக நூலகர்கள் கல்விசார் பதவி நிலைகளுக்கு விண்ணப்பிக்கவும் கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியுமென்பதினை ஆணித்தரமாக உறுதிப்படுத்தக் கூடிய ஒரு வரலாற்று பதிவினை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக அமையும். 1992 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகராக கடமையாற்றிய திரு W.B. டோரகும்பரே என்பவர் பல்கலைக்கழகத்தின் உயர் கல்விசார் பதவி நிலையான உபவேந்தராக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு நியமிக்கப்பட்டார். இது ஓர் வரலாற்று நிகழ்வு மட்டுமல்லாது பல்கலைக்கழக நூலகர்கள் கல்விசார் ஊழியர்களே என்பதற்கு ஒரு மிகச் சிறந்த சான்றாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வாறான கல்விசார் தகமைகளையுடைய பல்கலைக்கழக நூலகர்களின் வகிபங்கு என்ன என்பதை சற்று உற்று நோக்குவோம். ஒரு பல்கலைக்கழகம் தன்னை பாடசாலைச் சூழலிலிருந்து வேறுபடுதிக் கொள்ளும் ஒரு முக்கிய சிறப்பம்சமாக அமைவது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை முன்னேடுப்பதேயாகும். எனவே பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி கலாசாரத்தினை கட்டியெழுப்ப உதவுவதுடன் ஆராய்ச்சி தொடர்பாக மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் தேவையான சரியான வளங்களையும் வழிகாட்டல்களையும் உரிய நேரத்தில் வழங்கி அவர்களை வளப்படுத்துவதுடன் ஆராய்ச்சி தொடர்பான செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான தகவல் அறிதிறனுடைய (Information literate) பட்டதாரிகளையும் விரிவுரையாளர்களையயும் உருவாக்கும் பாரிய பங்கு பல்கலைக்கழக நூலகர்களிற்குரியதாகும்.

இலங்கையில் பல பல்கலைக்கழகங்கள் தற்போது நூலகர்களின் உண்மையான வகிபங்கினை இனம் கண்டு பல பரிமாணாங்களில் நூலகர்களை உள்வாங்கி தமது கல்விசார் செயல்பாடுகளை திறம்பட மேற்கொண்டு வருவதுடன் ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைகளையும் செவ்வனே மேற்கொண்டு வருகின்றன. எனினும் சில பல்கலைக்கழகங்களில் நூலகர்களுக்கான சரியான அங்கீகாரம் வழங்கப்படாமல் அல்லது சரியான முறையில் நூலகர்கள் கல்விசார் நடவடிக்கைகளில் உள்வாங்கப்படாமல் காணப்படுவது ஒரு குறையாகவே உள்ளது. சில பல்கலைக் கழக நூலகர்கள் (Librarian) தங்களது கல்வி சார் வகிபங்கினைச் சரியாக உணராமல் வெறுமனே நிருவாக உத்தியோகத்தர் போன்று செயற்படுவதும் மற்றைய

நூலகர்களை அவ்வாறே செயற்பட வைப்பதும் நடைபெறாமலும் இல்லை. இதுவும் ஒரு குறைபாடாகவே உள்ளது.

பல்கலைக்கழக நூலகர் பதவி நிலையில் காணப்படும் சிறு மயக்க நிலையே பெரும்பாலான கல்விசார் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக நூலகர்கள் உள்வாங்கப்படுவதற்குத் தடைக்கல்லாக அமைகிறது. அதாவது பல்கலைக்கழக நூலகர்களின் பதவி நிலைகளில் காணப்படும் அதி உயர் பதவி நிலையான நூலகர் (Librarian) பதவி பல்கலைக்கழகங்களில் சுழற்சி முறையற்ற தனி ஒரு பதவியாக காணப்படுவதனால் ஒருவர் மாத்திரமே இப்பதவியை வகிக்க முடிகிறது. மேலும் ஏனைய கல்விசார் தலைமைத்துவப் பதவி நிலைகளான உபவேந்தர், பீடாதிபதி மற்றும் துறைத் தலைவர் போன்றல்லாது ஓர் நிரந்தர தலைமைத்துவப் பதவி நிலையாக இது காணப்படுகிறது. எனவே நூலகர் பதவி நிலையை அடையும் ஒருவர் அவரது ஓய்வூதிய வயதெல்லை (65 வயது) வரை அல்லது அவரின் ராஜினாமா வரை அல்லது அவரின் மறைவு வரை நிரந்தரமாக அத்தலைமைத்துவப் பதவியில் நிலைத்திருப்துடன் நூலகர் பதவிக்கு அடுத்த நிலைகளில் உள்ள பிரதி நூலகர், சிரேஷ்ட நூலகர் (தரம் I & II) போன்ற பதவி நிலைகளில் உள்ளவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட நூலகரிற்கு சமமான தகமையினையோ அல்லது அதைவிட மிகையான தகமையினையோ கொண்டிருந்தபோதிலும் நூலகர் பதவியினை அடைய முடியாத நிலையினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல பிரதி நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள் பொருத்தமான தகமைகள் இருந்தும் தமது அதியுயர் பதவி உயர்வினை பெற்றுக் கொள்ளாமல் ஓய்வு எய்திச் செல்கின்றனர்.

மேலும் ஒரு நூலகத்தின் முழுமையான நிர்வாக நடவடிக்கைகளுக்கும் முகாமைக்கும் பொறுப்புடையவர் நூலகரே. எனவே தொடர்ச்சியான நிரந்தர தலைமைத்துவ நூலகர் பதவி நிலை நூலகத்திற்குள் புதிய முகாமைத்துவ நுட்பங்கள் அறிமுகப்படுத்தபடுவதற்கும் புதிய புதிய எண்ணக்கருக்கள் நூலகங்களில் உள்வாங்கப்படுவதற்கும் ஓர் பெரும் தடைக்கல்லாக அமைகிறது. இந்நிலை பொருத்தமான முறையில் உணரப்பட்டு தகுதி உடையவர்கள் எவ்வித தடையுமின்றி தமக்குரிய பதவி உயர்வை பெற்றுக்கொள்ள வகை சமைப்பதுடன் பல்கலைக்கழக நூலகங்களில் வெவ்வேறு வகையான எண்ணக்கருக்கள் தோற்றுவிக்கப்பட்டு வெவ்வேறு வகையான பரிமாணாங்களில் பல்கலைக்கழகங்களின் கல்விசார் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைய வழி சமைப்பது இன்றியமையாததாகும். அதுமட்டுமல்லாமல் தற்போது உள்ள நிலைமைகளில் நூலகர் பதவி நிலை நிரந்தர சுழற்சி முறையற்ற தலைமைத்துவ பதவியாக காணப்படுவதால் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் நூலகர் (Librarian)

பதவி நிலைக்கு ஒருவரை தேர்ந்தெடுக்கும் பொழுது அதனை மிகவும் நுட்பமாகவும் நேர்த்தியாகவும் கையாளுவதுடன் மிகவும் பொருத்தமான தகுதியான சிறந்த நபரை நியமிக்க வேண்டிய கடப்பாடு பல்கலைக்கழக நிர்வாகத்திற்குண்டு.

எனவே பல்கலைக்கழக நூலகர்களின் கல்விசார் வகிபங்கினை முழுமையாக கருத்திற்கொண்டு அதற்கேற்ப பல்கலைக்கழக நூலகர்களின் மனிதவளத்தை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் ஒரு பல்கலைக்கழகம் கற்றல் கற்பித்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளில் தன்னை மேம்படுத்திக் கொள்ள முடியும். இது பல்கலைக்கழகத்தை ஓர் முன்னோக்கிய பாதையில் இட்டுச்செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில் ‘‘நூலகமே பல்கலைக்கழகத்தின் இதயம்’’

*****

*“The essence of trade unionism is social uplift. The labor movement has been the haven for the dispossessed, the despised, the neglected, the downtrodden, the poor.”*

\- *A. Philip Randolph*